State Banks' Staff Union
(CHENNAI CIRCLE)
(Regd. No: 883)
(Affiliated to All India State Bank of India Staff Federation)
POST BOX NO.1754
STATE BANK BUILDINGS
84, RAJAJI SALAI
CHENNAI – 600 001.

**CIRCULAR NO.5** **29TH APRIL 2025**

# மே தின வாழ்த்துச் செய்தி – ஓரணியில் திரள்வோம்

தோழர்களுக்கு வணக்கம்

மே 1, உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, ஸ்டேட் வங்கி ஊழியர் சங்கம் சென்னை வட்டாரத் தோழர்கள் அனைவருக்கும் புரட்சிகரமான வாழ்த்துகளைத் தெரிவித்துகொள்கிறது.

மே தினம் வெறும் அலங்காரத்துக்காகக் கொண்டாடப்படுவதில்லை. 1886-ஆம் ஆண்டு மே மாதம், அமெரிக்காவின் சிகாகோ நகரில், எட்டு மணி நேரம் வரையறுக்கப்பட்ட வேலை நேரத்திற்காக வேண்டித் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர். காவல்துறை நடத்திய துப்பாக்கிச்சூட்டில், போராட்டத்தில் கலந்துகொண்ட பலபேர் உயிரிழந்தனர். இதனால் வெகுண்டெழுந்த தொழிலாளர்கள், மேலும் தீவிரமாகப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அந்த எழுச்சி உலகம் முழுவதும் பல போராட்டங்களைத் தோற்றுவித்தது. பிற்காலத்தில் சிகாகோவில் நடந்த போராட்டத்தின் நினைவாக மே ஒன்றாம் தேதி, தொழிலாளர் தினமாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் முதன்முதலாக தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது சென்னையில்தான். 1923-ஆம் ஆண்டு லேபர் கிசான் கட்சியின் தலைவராக இருந்த எம். சிங்காரவேலர் தலைமையில், திருவல்லிக்கேணி கடற்கரையில், மே தின ஊர்வலம் நடைபெற்றது. அது போலவே, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமும் முதலில் தொடங்கப்பட்டது சென்னையில்தான்.

தொழிலாளர்களின் உரிமைகளைத் தொடர்ச்சியாக வலியுறுத்தும் மே தினம் பொதுத்துறை வங்கிகளிலும் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்காகவும், கிராமப்புற மேம்பாட்டுக்காகவும், 1969-ஆம் ஆண்டு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. “வங்கிகளின் தேசியமயமாக்கல் நடவடிக்கை, சுதந்திரத்துக்குப் பின் எடுக்கப்பட்ட பொருளாதார முடிவுகளில் மிகச் சிறந்த ஒன்று. 1991-ஆம் ஆண்டு பொருளாதாரச் சீர்திருத்தங்களைவிட முக்கியமானது” என்று பல நிதி ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர். துரதிருஷ்டவசமாக அந்தக் கருத்தை இன்றைய நிதியமைச்சகம் ஒப்புக்கொள்ளவில்லை. வங்கிகளைத் தனியார்மயமாக்குவதில் தீவிர ஆர்வம் காட்டிவருகிறது.

பெருவாரியான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விவசாயம், சிறு, குறுதொழில்கள், பெண்களின் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கல்விக் கடன்கள் வழங்குவதில் அரசு வங்கிகள் பெரும் பங்காற்றுகின்றன.

தனியார் வங்கிகள் போல் அல்லாமல் பொதுத்துறை வங்கிகள் நாட்டிற்கு ஆற்றிடும் சேவைகள் ஏராளம். இயற்கைப் பேரழிவுகளின் போது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது, கொரோனா பெருந்தொற்று காலத்தில் மத்திய சிறு குறு நிறுவனங்களுக்கு அவசரகாலக் கடன் உதவிகளை அளித்தது, அரசின் நலத் திட்டங்களை கோடிக்கணக்கான மக்களுக்குக் கொண்டு சேர்த்தது எனப் பொதுத்துறை வங்கிகளின் இடத்தை என்றுமே தனியார் வங்கிகளால் ஈடு செய்ய முடியாது.

பொதுத்துறை வங்கிகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு உட்பட்டவை. ஆனால் தனியார் வங்கிகளுக்கு இந்த சட்டம் பொருந்தாது. அவற்றில் வெளிப்படைத்தன்மை கிடையாது. அதோடு, எந்த தனியார் வங்கியின் பணி நியமனத்திலும் பட்டியல் இன மக்கள், பழங்குடியினர், முன்னால் ராணுவ வீரர், உடல் ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு இல்லை.

தற்போது வங்கித் துறை, நாளொரு தொழில்நுட்பம், பொழுதொரு புதுச்சேவை என எண்ணற்ற மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. அவற்றை வேகமாகக் கற்றுக்கொண்டு விரைவாகச் செயலாற்ற வேண்டிய நிலைமையில் வங்கி ஊழியர்கள் இருக்கின்றனர். எந்த பணியையும் முழுமையாகப் புரிந்து கொண்டு, வங்கியின் சட்டதிட்டங்களுக்குட்பட்டுச் செய்வது முக்கியம். அப்படிச் செய்யாததால், சமீப காலங்களில் நமது ஊழியர்களில் பலரின் மேல் ஒழுங்கு நடவடிக்கைகள் (Disciplinary proceedings) எடுக்கப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற ஒழுங்கு நடவடிக்கைகளைத் தவிர்க்க, நமது தொழிற்சங்கம் பல்வேறு தற்காப்பு முயற்சிகளை எடுத்து வருகிறது. பணியின்பொழுது செய்யக்கூடியவை, கூடாதவை (Dos and Don’ts) சர்வீஸ் கண்டிஷன்ஸ் போன்ற புத்தகங்களை வெளியிட்டும், அகவிலைப்படி சுற்றறிக்கையில் (DA Circular) அவசியமான தகவல்களைச் சேர்த்தும், ஒழுங்கு நடிவடிக்கைகள் குறித்த கருத்தரங்குகளை அவ்வப்பபோது நடத்தியும் ஊழியர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

சமீபத்தில் வெளியான ஒரு அறிக்கையின்படி, கடந்த பத்தாண்டுகளில் பொதுத்துறை வங்கிகளில் ஊழியர்களின் எண்ணிக்கை வெகுவாக சுமார் ஒன்றரை லட்சம் வரை குறைந்திருக்கிறது. ஐந்து நாள் வேலைக்கு அடுத்தபடியாக இந்த கோரிக்கையைத்தான், அகில இந்திய ஸ்டேட் வங்கி ஊழியர் சம்மேளனம் வலியுறுத்திப் பேசியிருக்கிறது. இந்திய வங்கி கூட்டமைப்பு (IBA) ஊழியர் நியமன கோரிக்கையை விரைவில் பரிசீலிப்பதாக உறுதியளித்திருக்கிறது. அது போலவே ஸ்டேட் வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் வற்புறுத்தல்களினால் மெஸெஞ்சர் பணியிடங்களுக்கு நிரந்தரப் பணியாளர்களை நியமிக்கவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் நம் ஒற்றுமைக்கும் நமது சங்கத்திற்கும் கிடைத்த சிறுவெற்றி. தொடர்ந்து ஒற்றுமையோடு இருந்து, அரசுக்கும், மற்றவர்களுக்கும் நம் பலத்தைக் காட்ட வேண்டிய நேரமிது.

தனியார்மயமாக்கல் முயற்சிகளுக்கு எதிராக ஓரணியில் திரள்வோம். நமது ஒருங்கிணைந்த குரலை இந்த மே தினத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்வோம், நமது ஒற்றுமை உறுதியானது, தொழிற்சங்கத்துடன் தொழிலாளர்களுக்கான பிணைப்பு, வலிமையானது என உலகுக்கு உரக்கச் சொல்வோம்.

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக !**

**ஸ்டேட் வங்கி ஊழியர் சங்கம் வாழ்க !**

(வீ. ஸ்ரீதரன்)

**(பொதுச் செயலாளர்)**

**SBSU (CC) ::: AISBISF : : : NCBE ::: UFBU ... ZINDABAD**